Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 28-3-1985 வியாழக்கிழமை (பங்குனி 15 றஜப்-5) முழக்கம் 25

## தமிழகத்தில் இலங்கை அகதிகள் 85,610 பேராக அதிகரிப்பு

1983ம் ஆண்டு ஜுலை கலவரத்தின் பின்னர் இலங்கையிலிருந்து எண்பத்து ஐயாயிரத்து அறுநூற்றுப் பத்துப்பேர் அகதிகளாக பாரதத்துக்குள் வந்துள்ளனர் என்று மத்திய உள்துறை இணையமைச்சர் திருமதி. ராம் திவாரி சின்ஹா நேற்று லோகசபாவில் தெரிவித்தார் அதேவேளை கடந்த மாதம் ஐந்தாம் திகதி முதல் இம்மாதம் பதின்மூன்காம் திகதி வரை மூவாயிரத்து அறுநூறு குடும்பங்களைச் சேர்ந்த பதினையாயிரத்து ஐநூற்று முப்பது இலங்கை அகதிகள் தமிழகம் வந்துள்ளனரென்று தமிழக சட்டசபையில் அறிவிக்கப்பட்டது மண்டபம் முகாம் நிறைந்து விட்டதால் இவர்கள் இதர பன்னிரண்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

★ அமைச்சர் அத்துலத் முதலி நேற்று விடுத்த அறிவிப்பு:

# தீவிரவாத தலைவர்களும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு; முன்னர் ஆயுதங்களை வீசவேண்டும்

(கேகாலை)

''வன்செயல்களைத் தான் எதிர்ப்பதாக இந்தியா பகிரங்கமாக அறிவித்துள்ளது. எனவே நாம் இந்தியாவைக் கண்டிக்கத் தேவையில்லை. இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுவார்த்தைக்குத் தமிழ்த் தீவிரவாதிகள் தலைவர்களையும் நாம் அழைக்க வேண்டும். அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டாலே இது சாத்தியமாகும்''

மேற்கண்டவாறு அமைச்சர் லலித் அத்துலத்முதலி கேகாலையில் இடம்பெற்ற பாடசாலை நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

தமிழ்த் தீவிரவாதிகள் இவ்

—4ஆம் பக்கம் பார்க்க

# தென் இந்தியா முயற்சித்தால் பிரச்சினையை தீர்க்க முடியும்!

## கர்நாடக முதல்வர் ஆலோசனை சிறந்தது; இணைப்பு "சி"யை அமுல்படுத்த வாய்ப்பு

(எமது விசேஷ நிருபர்)

"இந்திய வெளியுறவு அமைச்சுச் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரியின் மூன்று நாள் கொழும்பு விஜயத்தின் பெறுபேறுகளைப் பாரத மத்திய அரசு செயற்படுத்துவது, தென்னிந்திய நான்கு மாநிலங்களின் சட்டசபைகளினதும் முதலமைச்சர்கள் எடுக்கவிருக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் தான் தங்கியுள்ளது வெறும் பேச்சுக்களைக் கைவிட்டு கர்நாடக முதலமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே தெரிவித்த ஆலோசனையின்படி தென்னிந்திய முதலமைச்சர்கள் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்."

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளுடன் நெருங்கிய தொடர்புடைய தமிழ் அமைச்சர் ஒருவர் மேற்கண்டவாறு 'ஈழமுரசு'க்கு நேற்றிரவு தெரிவித்தார்.

"திரு. பண்டாரி வந்தார்; பேசினார்; சென்றார்; சென்றார் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. அவர் இன்னும் செய்வதற்கு எவ்வளவோ இருக்கிறது ஆகக்குறைந்ததுமறைந்த பிரதமர் இந்திரா காந்திக்கு வாக்குறுதி அளித்தபடி இணைப்பு 'சி' யையாவதுநடைமுறைப்படுத்துவதின் மூலமே ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியும்" என்று மேலும் தெரிவித்த சர்பந்தப்பட்ட அமைச்சர், இதனை நேற்று முன்தினம் திரு பண்டாரியிடம் தாம் விபரமாக எடுத்துக் கூறியதாகவும் சொன்னார்.

"தற்போது தமிழ்நாடு

— 4ஆம் பக்கம் பார்க்க

### ஆறு நவீன ஹெலிகப்டர்கள்

இலங்கை ஆறு நவீன அமெரிக்க 'பெல்' ஹெலிகப்டர்களை வாங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி பதினைந்து மில்லியன் அமெரிக்க டாலர்களாகும்.

## மூன்று இளைஞரை விடுவிக்க ஹர்த்தால் எச்சரிக்கை!

திருநெல்வேலிப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட மூன்று இளைஞர்களையும் எவ்வித நிபந்தனையுமின்றி உடன் விடுதலை செய்யாவிட்டால் திருநெல்வேலிப் பகுதியில் இன்று வியாழக்கிழமை முழு நாள் ஹர்த்தால்அனுஷ்டிக்கப்படும் என்று 'பொது மக்களி'ன் பெயரில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த மாஸ்டர், இடி அமீன், சுரேன் ஆகிய மூவரும் அதே அணியைச் சேர்ந்தவர்களால் தாக்கப்பட்டு, கடத்திச் செல்லப்பட்டதும் அதனைக் கண்டித்து பெருமளவு தாய்மார்கள் இங்குள்ள கோவில் ஒன்றில் உண்ணாவிரதம் இருந்ததும் தெரிந்ததே.

### விடுதலை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அம்பலப் புலம் என்னும் இடத்தைச் சேர்ந்தவர்கள் நால்வர் சில தினங்களுக்கு முன்னர் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் தீவிர விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர், கடத்தல்காரர் தம்மை மிகவும் அன்பாக உபசரித்ததாகக் கூறுகின்றார்கள்.

## அனுரா, ஸ்ரீமாவோ, ஜனாதிபதியை சந்தித்த பின்னர் ரமேஷ்பண்டாரி நாடு திரும்பினார்!

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும், திரு. ரமேஷ் பண்டாரியும் நேற்று இரண்டாவது தடவையாக நண்பகல் போசன விருந்தில் கலந்து கொண்டு, சுமார் ஒன்றேகால் மணிநேரம் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

அவர்கள் இருவரும் கலந்துரையாடிய விடயங்கள் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்காவையும் தனித்தனிசந்தித்து திரு ரமேஷ் பண்டாரி உரையாடினார்.

நேற்று பிற்பகல் விமானம் மூலம திரு. பண்டாரி பம்பாய் சென்றார்,

இலங்கையில் ஐக்கியம், இறைமை, கௌரவம் ஆகியவற்றுக்கு உட்பட்டதாகவே

—4ஆம் பக்கம் பார்க்க

## தனியார் போக்குவரத்து வேலைநிறுத்தம் தோல்வி!

தனியார் போக்குவரத்துச் சேவையைச் சீர்குலைக்கும் வண்ணம் சமீப காலமாக நடைபெற்று வரும் சம்பவங்களைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று நடாத்தப்பட்ட ஒரு நாள் வேலை நிறுத்தம் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியையளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலையில் ஒரு சில மினி பஸ்களே யாழ் நகரில் காணப்பட்ட போதிலும் பின்னர் பெரும்பாலான பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. ஆனால் குறிப்பிட்ட ஓர் இரு பாதைகளில் மினி பஸ் சேவை முற்றாக நடைபெறவில்லை என்றும் கூறப்படுகின்றது.

காரைநகர், காங்கேசன் துறை, கச்சேரி பாதைகளில் தனியார் பஸ் போக்குவரத்துகள் வழக்கம்போலவே காணப்பட்டன,

## நாவற்குழி புதிய வீடுகளில் 45 குடும்பம் குடியேற்றம்

(சாவகச்சேரி)

நாவற்குழி தேசிய வீடமைப்புத் திட்டத்தில் பூர்த்தியடைந்துள்ள வீடுகளில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உத்தரவுடன் இப்பொழுது நாற்பத்தி ஐந்து குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. மேலும் எண்பத்தி ஐந்து குடும்பங்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரியவந்துள்ளது

குருநகரிலுள்ள வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் வசிப்பதற்கு வீடின்றிப்

—4ஆம் பக்கம் பார்க்க

### வாளி, கதிரை கொள்ளை

யாழ். புகையிரத நிலையத்துடன் சேர்ந்திருக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திலிருந்து வாளி, கதிரைகள்

—4-ஆம் பக்கம் பார்க்க

தெல்லிப்பளை: கூரையை பிளந்து நெஞ்சைதுளைத்த குண்டு

# வானத்திலிருந்து வந்த சூடுபட்டு கூட்டுறவு சங்க காசாளர் மரணம்!

(மல்லாகம்)

தெல்லிப்பளை, மல்லாகம் பகுதிகளில் நேற்றுக்காலை வானத்திலிருந்து நிலத்தை நோக்கி பல தடவைகள் தீர்க்கப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிவேட்டுகளால் ஒருவர் மரணமானதாகவும், பலர் காயத்திற்குள்ளானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் காசாளரான கதிர்காமநாதன் என்பவரே அகால மரணத்தைத் தழுவியவராவர்

நேற்றுக்காலை ஹெலிகப்டர் ஒன்று தெல்லிப்பளைப் பகுதியால் தாழப் பறந்து சென்ற போது, பட்டாசு வெடிகள் வெடிப்பது போன்ற சப்தம் கேட்டதாகவும், இது நடைபெற்று சுமார் பதினைந்து நிமிடங்களின் பின்னர் மீண்டும் ஹெலிகப்டர் ஒன்று பறந்து சென்ற போது வானத்தில் இருந்து நிலத்தை நோக்கிச் சுடப்பட்ட சப்தம் கேட்டதாம்.

அச்சமயம் தெல்லிப்பளைச் சந்தியில் அமைந்துள்ள பல

—4ஆம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதி நாளை பாகிஸ்தான் பயணமாவார்

நாளை வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன பாகிஸ்தானுக்கு விஜயம் செய்கிறார். அடுத்தமாதம்

—4ஆம் பக்கம் பார்க்க

திருநெல்வேலிக் கூட்டத்தில் பேச்சு:

# பல ஓய்வூதியகாரருக்கு குடியிருக்க வீடில்லை; இந்தக் குறையை நிவிர்த்திசெய்வதவசியம்

(இருபாலை)

எமது சங்கம் காலத்திற்குக் காலம் உறுப்பினர்களது நலனுக்காகவும், கிராம அபிவிருத்திக்காகவும், பிரதானமாக படித்த இளைஞர்கள், யுவதிகள் நலனுக்காகவும் பல நடவடிக்கைகளையும், செயற்திட்டங்களையும் மேற்கொண்டு வந்துள்ளது ஆனால் கடந்த ஆண்டு ளில் இடம்பெற்ற எதிர்பாராத அசம்பாவிதங்கள், பசற்ற நிலைமை காரணங்களினாலும் பின்போடப்பட்டுவந்துள்ளது.

திருநெல்வேலி தமிழ் கலவன் சைவ வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின மூன்றாவது வருடாந்த பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தலைவர் திரு. வி மாணிக்கம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இன்று வடமாகாணத்தில் 23, 183 ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெறுகிறார்கள். ஆனாலும் சில ஓய்வூதியகாரர்களுககு குடியிருப்பதற்கு சொந்தமான வீடில்லாத குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு எழுத்து மூலம் வீடமைப்பு அதிகார சபைக்கு அறிவித்துள்ளோம் என்றார்.

'வெண்ணெய் திரண்டுவரும் போது மத்து உடைந்தாற் போல' என்ற முதுமொழிக் கிணங்க எமது முயற்சிகளுக்கு தற்போதுள்ள நிலைமைகள் காரணமாக ஸ்தம்பிதமடைந்துள்ளது பெரும் மனவேதனை யாகவுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு ஆர். ரி சுப்பிரமணியத்தை ஆசிரியராகக் கொண்ட 'ஓய்வூதியம்' என்னும் பத்திரிகை ஆரம்பிப்பதென்றும் இக்கூட்டத்திற் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்திற்குப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சிவதர்ம வள்ளல் திரு க. கனகராசா மங்கள விளக்கேற்றி உரையாற்றுகையில் நாங்கள் உலகத்தில் எவ்வாறு வாழ்வது என்பது பேச்சல்ல தினமும் ஆயிரக்கணக்கான மக்களைப் பார்த்து வாழ்வதே சாலச் சிறந்தது என்றார்.

எங்கள் பகுதியில் உள்ள வரண்ட குளங்களைத் திருத்தி மழை பெய்யும்போது இயன்றளவு மழை நீரைத் தேக்கி விவசாயத் துறைக்கும் உள்ளூர் உற்பத்திகளுக்கும் ஆதரவு கொடுப்போமென்றார்.

திருவாளர்கள் ஆர் ரி சுப்பிரமணியம், ஏ. எம் இராஜேந்திரன் ஆகியோரும் உரையாற்றினர்.

பின்னர் நடப்பு ஆண்டு நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது.

தலைவராக திரு. ஏ. எம். இராஜேந்திரனும் உபதலைவர்களாக, திரு எஸ். ராஜநாயகம், திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் ஆகியோரும் காரியதரிசியாக திரு. என். என். இடைக்காடரும் தனாதிகாரியாக திரு எம் அரிச்சந்திரனும் உதவித் தனாதிகாரியாகத் திரு வி, கே பொன்னையாவும் உதவிச் செயலாளராக திரு. எஸ். ஏ அம்பலவாணரும், கணக்குப் பரிசோதகராக திரு. கே பொன்னம்பலமும் தெரிவாகினர்.

## நாவலரின் அரிய நூல்கள் நூலகத்தில் வேண்டும்

நாவலர் பாடசாலையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் நூலக வேலை விரைவில் பூர்த்தி பெற வேண்டும். நாவலரின் அரிய நூல்கள் அங்கு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இதன்மூலம் அவைகளைப் பயன்படுத்த விரும்புவோர் இந்நூலகத்தை தேடிவரும் நிலை உருவாகும்.

யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலையில் நடைபெற்ற சர்வதேச இளைஞர் ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது யாப்பாண வட்டார கல்வி அதிகாரி திரு இ சிவானந்தன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக மாணவர் தலைவர்களை நியமிக்கும் பாரம்பரியம் நாவலர் பாடசாலையிலும் கடைப்பிடிக்கப்படுவதையிட்டு வட்டாரக்கல்வி அதிகாரி மகிழ்ச்சி தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திரு ப. சிவஞானசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசிரியர்களும் உரையாற்றினர் சிரேஷ்ட மாணவர் தலைவி செல்வி. வே. மாலினி நன்றி தெரிவித்துப் பேசினார்.

## குப்பிளான் கலை இலக்கிய விழா

(ஏழாலை)

குப்பிளான் விக்னேஸ்வர மகாவித்தியாலயத்தில் கலை இலக்கிய விழா வெகு விமரிசையாக நடைபெற்றது வித்தியாலய அதிபர், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை வகித்தார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கட்டுவன் ஞானபாஸ்கரோதய வித்தியாசாலை அதிபரும், எழுத்தாளருமான திரு அனு. வை. நாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வித்தியாலய வெளியீடான 'கலைக் கோவில்' கையெழுத்துச் சஞ்சிகையை திரு. நாகராஜன் விமர்சனஞ் செய்து உரை நிகழ்த்தினார். 'குமணன்' நாடகமும் நடைபெற்றது. மாணவ மாணவியாது கலை நிகழ்ச்சிகளும், பேச்சுக்களும் இடம் பெற்றன.

## நாகதம்பிரான் உற்சவம்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 28ம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 5ம் திகதி வரை நடாத்தப்படும். இம்முறை ஆலய உற்சவம் பகல் வேளையில் மட்டுமே நடைபெறும். பொங்கல் விழா 4ம் திகதி காலை முதல் மாலை வரையும் மீண்டும் 5ம் திகதி காலை முதல் நண்பகல் வரையும் நடைபெறும்.

உற்சவ காலங்களில் பரந்தன் சந்தியிலிருந்து ஆலயம் வரை வாகனப் போக்குவரத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இறுதி நாட்களில் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, முல்லைத்தீவு, வவுனியாவிலிருந்து விசேட பஸ் சேவைகள் நடாத்தப்படும்.

## அமைதியான திருப்பலி

யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் தவக்காலத்தின் 6ம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு ஆண்டுதோறும் கல்வாரிக் கெபியில் இடம்பெறும் வழிபாடுகள் சூழ்நிலை காரணமாக அமைதியான முறையில் நடைபெறும் திருப்பலி வெள்ளி காலை 6 மணிக்கும் மாலை 4-30 மணிக்கும இடையில் நடைபெறும். கல்லறை ஆண்டவர் திருச்சுரூபம் ஆலயத்துக்கு வெளியில கொண்டு வரப்படமாட்டாது. பக்தர்களின் ஆராதனைக்காக ஆலய பீடமுன்றலில நாள் முழுவதும் வைக்கப்பட்டிருக்கும.

வியாபாரமபெருக விளம்பரம் செய்க




※ மானிப்பாய் தம்பிராசா செல்லம்மா தம்பதிகளின் மகள் சுமலதா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ பண்டத்தரிப்பு சிவகுருநாதன் உலகநாயகி தம்பதிகளின் மகள் செல்வவதனி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

※ கிளிநொச்சி சண்முகநாதன் பற்றிமா றூத் தம்பதிகளின் மகன் சுவர்ணன் இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ நல்லூர் மாடாசிவம் சிவபதம் தம்பதிகளின் மகன் புனிதமூர்த்தி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ கோண்டாவில் இரஜேந்திரன் வசந்தா தம்பதிகளின் மகன் ஆர்த்திகன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ கரவெட்டி கனகசுந்தரம் கமலா தம்பதிகளின் மகள் பிரேமிளா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ யாழ்-மாணிக்கவாசகர் இராசேஸ்வரி தம்பதிகளின் மகன் உதயணன் இன்று தனது பிறந்த நாளைக்கொண்டாடுகிறார்.

※ ஊர்காவற்றுறை நித்தியானந்தன் இந்திராணி தம்பதிகளின் புதல்வி ரஜனி முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

※ ஈச்சமொட்டை செபஸ்தியன் லலிதா தம்பதிகளின் மகன் தியாகதாசினி தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ மாதகல் நுணசை வீதி சண்முகநாதன் சோதிமலர் தம்பதிகளின் மகன் பத்மசிறி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## பத்தமேனி வடக்குப் பகுதி சுகாதார மாதிரிக் கிராமம்

பத்தமேனி வடக்குப் பகுதியை ஒரு சுகாதார மாதிரிக் கிராமமாக்குவதற்கு சுகாதார வைத்தியப் பகுதியினர் முன்வந்துள்ளனர்.

தற்போது இங்கு பூச்சித்தடை மருந்து, கிணறுகளுக்குக் குளோரின் போடுதல் ஆகியவேலைகளை அச்சுவேலிப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. இ. நடராசா மேற்கொண்டு வருகின்றார்.

சுகாதாரக் குழுச் செயலாளரும் குடும்ப சுகாதார நலத்தொண்டர்களும் இத்திட்டத்தை அமுல் செய்ய வேண்டிய உதவிகளை செய்து வருகின்றார்கள். முப்பத்தியந்து மல கூடங்கள் ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஐம்பது மல கூடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. மாதர் ஐக்கிய நாணய சங்கத்தினரும் இவ்விடயத்தில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றார்கள். அப்பகுதிப் பொது மக்களும் இதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும நல்கி வருகின்றனர்.

## மாபெரும் ஏலவிற்பனை

இடம்:- யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுச் சந்தைக் கட்டடம் (நல்லூர் சந்தை)

காலம்:- இம்மாதம் 30-ம் திகதி சனிக்கிழமையும் 31-ம் திகதி ஞாயற்றுக்கிழமையும் தினசரி காலை 9 மணி தொடக்கம பொருட்கள் பல விதமானவைகள பொருட்களைப் பார்வையிடுவதற்கும் விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்:-

ஏலவிற்பனை நிலையம்,
கோப்பாய்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லூர், நாயன்மார் வீதியில் நல்ல நீர்க் கிணறுடன் பயன் மரங்களுடனும் 2 பரப்புக் காணியும, மறவன்புலோ, கேரதீவு றோட்டில் முருகமூர்த்தி கோவிலுக்கருகில 10 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. திருமதி. உருக்மணி அம்மா, 41/5, அரச வீதி, நல்லூர்

### வயல் விற்பனைக்கு

கள்ளியபிட்டி, கண்டாவளை, மடுக்கரை வீதியில் 10 ஏக்கர் வயல் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- க தியாகராசா, 'மதிவாசம்' புலோலி தெற்கு, புலோலி.

கலர் பிலிம் ... PROCESSING PRINTING ... கொழும்பு ஸ்ருடியோ


## உங்கள் காசோலைகளை பணமாக மாற்ற...

உங்கள் அன்றாட வாழ்க்கையில் காசோலைகளைப் பணமாக்கலும் பாதுகாப்பாகப் பேணுதலும் தவிர்க்க முடியாத தேவைகளாகும்! சீரற்ற சேவைகளால அவதிப்படும் உங்கள் உதவிக்கு தமிழர் நிதியம் நாணய முறித்திட்டத்தினை இன்றே நாடுங்கள்!

## நாணய முறித் திட்டம்

உங்கள் பணம் அல்லது அரசாங்க, கூட்டுத்தாபன, ஓய்வூதியக் காசோலைகளைச் செலுத்தி பணத்திற்கு ஈடான நாணய முறிகளாக மாற்றிக் கொள்ளுங்கள்!

## உங்கள் உடனடிப் பணத் தேவைக்கு

தமிழர் நிதியத்திலேயே இந்நாணய முறிகளை உடனடியாகவோ பின்னரோ பணமாக்கலாம் அல்லது வேறு எவருடனுமோ பரிவர்த்தனை செய்யலாம்!

மேலதிக விபரங்களுக்கு

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437



## கனடா பிரயாணமா?

கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் நற்செய்தி

சகல ஒழுங்குகளும் மிகச் சிறப்பான முறையில் விரைவாகச் செய்வதோடு மேல்நாட்டுக் கடவுச்சீட்டு (BRITISH PASSPORT) உள்ளவர் தன்னுடன் கூட்டிச் செல்வதோடு தேவையானவற்றையும் செய்து கொடுப்பார்.

விபரங்களுக்கு:
272, ஆ. வ. வீதி, அரியாலை-
என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்க.



## குகன் ஸ்ருடியோ

இடமாற்றம்

பருத்தித்துறை குகன் ஸ்ருடியோ சிவன் கோவில் வடக்கு தெணி றேட் 4 ஆம் வீட்டிலியங்குகிறது

ஈழமுரசு



### உதய சிந்தனை

அன்பினாலும், ஆத்ம தியானத்தினாலும் எதிரியின் மனத்திலும், பார்ப்போரின் உள்ளங்களிலும் மகத்தான மாறுதல்களை ஏற்படுத்த முடியும்.

- ஜவஹர்லால் நேரு

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி. 23336

## இதய ஒலி

28 3 85 வியாழக்கிழமை (இரத்தாக்ஷி பங்குனி 15)

# கண்ணுக்குத் தெரியும் நம்பிக்கை ஒளி

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக, சுமுகமான ஒரு சூழ்நிலையில் அமைதியான ஒரு தீர்வு ஏற்படக்கூடிய வழி வகைகள் காணப்படுகின்றன.

திரு. ரமேஷ் பண்டாரி கடந்த மூன்று தினங்களாக இங்கு நடத்திய சூறாவளிப் பேச்சு வார்த்தைகள் இந்த நம்பிக்கையை ஓரளவுக்கு ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

தமிழ் பிரதேசங்களில் முதலில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அமைச்சர் தொண்டமானின் கோரிக்கை, வேறு விதமாக அல்லது நேரடியாகச் சொல்வதானால் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து ஆயுதப் படையினரை வாபஸ் பெற வேண்டும் என்று வேண்டுவதாகும்.

இந்தியா வந்திருக்கும் சுமார் ஐம்பதாயிரம் தமிழ் அகதிகளும் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப வழிவகுப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று பத்திரிகைப் பேட்டியொன்றில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி குறிப்பிட்டுள்ளதும் அதனையே குறிப்பிடுகின்றது.

தமிழ்ப் பகுதிகளில் ராணுவத்தினர் புரியும் அனர்த்தங்கள் குறைந்தால் அல்லது ராணுவம் வாபஸ் பெறப்பட்டால் மட்டுமே அகதிகள் தாமாக இலங்கை திரும்பும் நிலை உருவாகும்.

மொத்தத்தில் பாரதப் பிரதமரிலிருந்து, அமைச்சர் தொண்டமான் வரையான அனைவருமே ராணுவ வாபஸைத்தான் வலியுறுத்தி வருகின்றனர்.

தீவிரவாத இளைஞர் இயக்கங்களும் இதனைத்தானே கேட்டு வந்தன.

சர்வகட்சி மாநாடு நடை பெறமுன்னரும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், தோல்வியுடன் முடிவடைந்த பின்னரும் தமிழர் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகளும் கூட ராணுவத்தை வாபஸ் பெறுமாறு தானே வற்புறுத்தி வந்தனர்.

இப்போது இரு நாடுகளினதும் உயர்மட்டப்பேச்சுவார்த்தைகளிலும் ராணுவ வாபஸே முதலிடத்தைப் பெறுகின்றது.

காலம் கடந்த பின்னர் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் ஞானம், படையினரை குறிப்பிட்ட காலத்துக்கு தமிழ் பகுதிகளிலிருந்து வாபஸ் பெறுவதற்கு இணக்கம் காணச் செய்யலாமென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த ஏற்பாடு ஒரு பக்கத்துச் சம்மதமாக இருக்காமல், இரு பகுதியினரும் அரசியல்தீர்வு காணப்படும்வரை ஆயுதங்களை கீழே வைக்கவேண்டும் என்ற கோரிக்கையாக 'உயர் பீடத்திலிருந்து' வந்துள்ளது.

நேற்று இரண்டாவது தடவையாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும், திரு. ரமேஷ் பண்டாரிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போதும், 'ஆயுதங்களைப் போடுவது' பற்றி இரு தரப்புக் கருத்துக்களும் நுணுக்கமாக ஆராயப்பட்டுள்ளன.

அமைச்சர்கள், எதிர்க்கட்சியினர், மதத்தலைவர்கள் மட்டத்தில் நடைபெற்ற சந்திப்புகள் ஒவ்வொன்றும் ஆயுதக் குறைப்பையும், அரசியல் தீர்வையும் வலியுறுத்தியிருப்பது நம்பிக்கையான ஒளியொன்றை கண்முன்னால் தோற்றுவித்துள்ளது.

இந்த வெளிச்சத்தின் துணை கொண்டு இரு நாட்டுத் தலைவர்களினதும் உச்சி மாநாடொன்றை நடத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வெண்ணெய் திரண்டு வந்துள்ள இந்த வேளையில், மீண்டும் காலம் கடந்து செல்ல விடாமல் ஜே. ஆர். - ராஜீவ் சந்திப்பு நடைபெறுவது, புதிய சூழ்நிலையொன்றை உருவாக்க வழி சமைத்துக் கொடுக்கும் என்பது எமது நம்பிக்கை.

இரத்தக் கறைகள் இரத்தாக்ஷியுடன் மறைந்து, புத்தாண்டு குரோதங்களை மறைத்து, நெருக்கடிகளுக்குத் தீர்வு காண உதவட்டும்.

## குவைத் நோக்கிச் சென்று கொண்டிருந்த

# சவூதி அரேபியக் கப்பல் மீது

# ஈராக் விமானம் குண்டு வீச்சு!

(லண்டன்)

வளைகுடாப் போரில் ஈராக்கும், ஈரானும் மீண்டும் குடியிருப்புப் பகுதிகளில் பழிக்குப்பழி வாங்கும் வகையில் பெரும் தாக்குதல்களை நடத்திவருவது உலகநாடுகள் பலவற்றிலும் பெரும் சஞ்சலத்தை உண்டு பண்ணியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்குடியிருப்புப் பகுதித் தாக்குதல்களில் இருபகுதிகளிலும் மாண்டோர் தொகை முப்பதாயிரத்துக்குமதிகம் என்று சென்ற சில தினங்களுக்கு முன்னர் பி பி ஸி அறிவித்தது. இப்போது இத்தொகை மேலும் அதிகரித்துள்ளது என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது இதற்கிடையில் ஈராக் போர் விமானம் ஒன்று குவைத் நோக்கிச் சென்று கொண்டிருந்த சவூதி அரேபியாவின் சரக்குக் கப்பல் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலால் கப்பல் தீப்பற்றி எரியத் தொடங்கியது என்றும் எனினும் உரியவேளையில் சவூதி அரேபியாவின் போர்க்கப்பல் ஒன்று விரைந்து சென்று பெரும் அனர்த்தம் விளைவதைத் தவிர்த்தது என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது உயிர்ச்சேதம் ஏதும் விளைந்ததா என்பது குறித்துத் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

இது இவ்வாறு இருக்க ஈராக்கும் ஈரானும் ஏவுகணை, பீரங்கி, விமானத் தாக்குதல்களை ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுக்காதவகையில் தொடர்ந்து நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இருநாடுகளினதும் போர் முனை அறிக்கைகள் தாக்குதல் விவரங்களை முன்னுக்குப் பின் முரணாக வெளியிடுவதால் உண்மையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது என்று சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

### அமெரிக்காவுக்கு பார்வதி சிலை

(சென்னை)

தமிழ்நாடு அரசு அமெரிக்காவில் நடைபெறும் கண்காட்சி ஒன்றிற்கு பார்வதி, கண்ணன் முதலான வெண்கலச் சிலைகளை பார்வைக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

### கி. ஜேர்மனில் நிகழ்ந்த சம்பவம்

## அமெரிக்க ராணுவ மேஜர் கொலை: நுணுக்க ஆய்வு

(வாஷிங்டன்)

சென்ற ஞாயிற்றுக்கிழமை கிழக்கு ஜெர்மனியில் வைத்து அமெரிக்க இராணுவ மேஜர் ஒருவர் சோவியத் இராணுவ வீரர் ஒருவரால் கொலை செய்யப்பட்ட சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்களில் பலத்தபரபரப்பைத் தோற்றுவித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஆர்தர் நிகலோல்சன் என்ற இம்மேஜரின் கொலை தொடர்பாக பல சந்தேகம் எழும் நிலையில் நுணுக்கமாக ஆராயப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## திருச்செந்தூர் இடைத்தேர்தல் 24ம் திகதி

(திருச்செந்தூர்)

திருச்செந்தூர் லோகசபைத் தொகுதிக்கான தேர்தல் ஏப்ரல் மாதம் இருபத்துநான்காம் திகதி நடைபெறவுள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கு ஏப்ரல் முதலாம் திகதி இறுதி நாளாகும்.

இந்திரா காங்கிரஸ் எம். பி திரு. கே. ரி. கோசல்ராம் காலமானதால் இவ்விடைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

### லெபனான் உள்நாட்டு யுத்தம்

## புதிய பாதுகாப்புத் திட்டம் பெய்ரூட்டில் தயாரானது

(பெய்ரூட்)

லெபனானில் உள்நாட்டுப் பிணக்குகள் மேலும் வலுப்பெறும் வகையிலான செயல்கள் உண்டாகி வருவதால் அதற்குமாற்று நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் பெய்ரூட்டில் ஆலோசனை நடைபெற்றது.

உள்நாட்டுப் போரினைத் தவிர்க்க இங்கு புதிய பந்தோபஸ்து திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது.

### பாரத மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

## இலங்கை இனப்பிரச்சினை: உலகப் பொது கருத்தைத் திரட்ட முயற்சிக்க வேண்டும்

(புதுடில்லி)

''இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் முடிவுகாண உலகப் பொதுக் கருத்தைத் திரட்ட பாரதம் முன் முயற்சி எடுக்க வேண்டும்'' என்று இந்திய மார்க்ஸிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டம் வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பஞ்சாப் விவகாரத்தில் அகாலிதள் தலைவர்கள் ஜனநாயக நெறிமுறைகளை உதாசீனப்படுத்தித் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கின்றனர் என்றும் இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பிளவு சக்திகளை எதிர்த்து இத்தலைவர்கள் குரலெழுப்ப வேண்டுமென்றும் மற்றோர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## தமிழ்நாட்டுக்கு உலக வங்கி ரூ. 7 கோடி கடனுதவி

(சென்னை)

உலகவங்கி தமிழ் நாட்டின் பதினான்கு நகராட்சி மன்றங்களுக்குக் குறைந்த செலவில் சுகாதாரத் திட்டங்களை மேற்கொள்ள ஏழு கோடி பத்து இலட்சம் ரூபா வட்டியில்லாக்கடனை வழங்கியுள்ளது.

செங்கப்பட்டில நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உலக வங்கியின் முகவர்குழு சார்பில் பேசுகையில் திரு. பெர்வாட்டோ என்ற பிரதிநிதி இத்தகவலை வெளியிட்டார்.

### வியட்னாமுக்கு பாரதமுதவும்

(புதுடில்லி)

''வியட்னாமின் வருங்கால வளர்ச்சிக்கு பாரதம் தன்னாலான எல்லா உதவிகளையும் அளிக்கும்'' என்று பாரதப் பாதுகாப்பு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் வியட்னாமியப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வாஸ்யுங்குடனான சந்திப்பின் போது உறுதியளித்தார்.

வியட்னாமியப் பாதுகாப்பு மந்திரி ஒரு வாரகால உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு பாரதம் வருகை தந்துள்ளார்.

சோஷலிஸ்ட் குழுவைச் சேராத நாடொன்றுக்கு வியட்னாமியப் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத் தக்கது.

### உள்துறை மந்திரி சபையில் அறிவிப்பு

## பஞ்சாப்: கிரிமினல் குற்றம் தவிர்ந்தோர்க்கு விடுதலை

(புதுடில்லி)

பஞ்சாப்பில் கிரிமினல் குற்றச்சாட்டுள்ளவர்கள் நீங்கலாக ஏனைய குற்றச்சாட்டுகளின் பேரில் காவலில் உள்ளவர்கள் சகலரும் வெகுவிரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இத்தகவலை லோக சபையில் பேசுகையில் உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் வெளியிட்டார்.

பஞ்சாப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதில் அரசு உயர் முன்னுரிமை அளிக்கும் என்றும் இதுபற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள உயர் மட்டக் குழு மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் சென்று சகல பகுதியினரையும் சந்தித்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அகதிகள் நிரந்தரமாக தமிழகத்தில் தங்கினால் இலங்கைக்கு வெற்றி!

ஈழமுரசு

(சென்னை)

"அகதிகளாக வந்துள்ள இலங்கை அகதிகள் தமிழகத்திலேயே நிரந்தரமாகத் தங்கும் நிலை நேருமானால் அது இலங்கையை விட்டுத் தமிழர்களை வெளியேற்ற வேண்டும் என்ற இலங்கையின் நோக்கம் நிறைவேறியதாகிவிடும்" என்று தமிழ்நாடு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் நேற்று தமிழ்நாடு சட்டசபையில் பேசுகையில் கூறினார். இது இவ்வாறு இருக்க, இலங்கையில் இருந்துவரும் அகதிகள் தங்குவதற்கென மண்டபத்தில் மேலும் மூவாயிரம் வீடுகளையும் தூத்துக்குடியில் ஆயிரம் வீடுகளையும் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. இதுகுறித்து நேற்றுத் தமிழ்நாடு சட்டசபையில் கொண்டுவரப்பட்ட கவனஈர்ப்புத்தீர்மானத்திற்குப் பதிலளித்து மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு. இராமசாமி பேசுகையில் தெரிவித்தார்.

அகதிகளுக்கு உடனடி நிவாரண உதவியாக தினசரி செலவுத்தொகை ரொக்கத்தொகை மலிவு விலையில் அரிசி, சமையல் பாத்திரங்கள், உடைகள் போன்றவை மத்திய அரசு நிர்ணயித்துள்ளவாறு வழங்கப்பட்டுவருவதாகவும் அவர் கூறினார். இவர்கள் தங்குவதற்கு மேலும் பலவீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சொன்னார்.

நமது கடலோரப் பகுதியில் காவலைப் பலப்படுத்த கடற்கரைப் பாதுகாப்புப் படையினருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டிருப்பதாக பிரதம மந்திரி திரு ராஜீவ்காந்தி கூறியிருப்பதாகவும் அமைச்சர் திரு இராமசாமி தெரிவித்தார்

## தமிழாசிரிய சங்கம் ஆட்சேபம்!

# இரத்மலானை இந்துக் கல்லூரி நிரந்தரமாக மூடப்படும்!

## மனிதவலு அமைச்சிடம் 1ம் திகதி கையளிப்பு

இரத்மலானை இந்துக் கல்லூரியை முதலாம் திகதி மனிதவலு அமைச்சிடம் கையளிக்கும் திட்டத்தினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், ஆட்சேபித்துக் கல்வி அமைச்சுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

1983 ஜூலைக் கலவரத்தை அடுத்து, இடம்பெயர்ந்தோரின் முகாமாக மேற்படி கல்லூரி இயங்கி வருகிறது. தற்போது இங்கு தங்கியுள்ளவர்களை அவர்களது விருப்பத்தின் பேரில் வசதியான இடங்களில் குடியமர்த்திவிட்டு மே முதலாம் திகதி கல்லூரியை மனிதவலு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு கல்லூரி அதிபரையும், கல்விப் பணிப்பாளரையும் கல்வி அமைச்சு பணித்துள்ளது.

கொழும்புவாழ் இந்துக்களின் கல்வி, பண்பாட்டு வளர்ச்சி கருதி இந்துக்களின் நன்கொடை மூலம் இக்கல்லூரி அமைக்கப்பட்டது. எந்த நோக்கத்துக்காக இக்கல்லூரி அமைக்கப்பட்டதோ அந்நோக்கம் நிறைவேறும் வகையிலும், இக்கல்லூரியில் பயின்று தற்போது சிங்களப் பாடசாலையில் மாலை நேரத்தில் பயிலும் மாணவர்களின் கஷ்டங்களை நிவர்த்திக்கும் வகையிலும், இந்துக்களின் மனம் புண்படாத வகையிலும் கல்வி அமைச்சு நடந்து கொள்ளும் எனத் தாம் நம்புவதாகவும் மகாசிவம் தெரிவித்தார்.

### ஜனாதிபதி நாளை..

—1ம் பக்கத் தொடர்

நாலாம் திகதி வரை அங்கு தங்கியிருக்கும் அவர் பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியா உல் ஹக் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடாத்துவார்.

எதிர்வரும் மூன்றும் திகதி நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு பிரதமர் பிரேமதாசா தலைமை தாங்குவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### தீவிரவாத..

—1ம் பக்கத் தொடர்

விதம் செயற்படுவார்களானால் அரசாங்கம் அவர்களுக்கு எதிரான தனது சகல நடவடிக்கைகளையும் நிறுத்திவிடும் என்றும் அமைச்சர் தமது பேச்சின் போது உறுதியளித்தார்.

தீவிரவாதிகளின் போராட்டம் இறுதிவரை வெற்றியளிக்காது என்று சொன்ன அமைச்சர், இதனையுணர்ந்து அரசியல் தீர்வு காண்பதற்கு ஏதுவாகத் தீவிரவாதிகள் தமது போரை நிறுத்துவதே நல்லது தவறினால் அதன் பலனை அவர்களே அனுபவிக்க வேண்டி வரும் எனவும் எச்சரித்தார்.

• வெளிநாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதன் மூலமே எமது பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அதற்காக மற்றைய நாடுகள் வழங்கும் சகல ஆலோசனைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை" என்றும் அமைச்சர் அத்துலத் முதலி சுட்டிக் காட்டினார்.

'சர்வதேச சட்டத்திற்கு அமையவும், மனித உயிர்களைப் பாதுகாக்கும் முறையிலும் நாம் நியாயமான விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். இளவரசர் சபுமல் யாழ்ப்பாணக் குடாவைக் கைப்பற்றிய போது கையாண்ட இராணுவ யுக்திகளைவிட வேறு விதமான இராணுவ யுக்திகளை நாம் கையாள வேண்டியிருக்கிறது" என்றும் அமைச்சர் சொன்னார்.

### தென் இந்தியா..

—1ம்- பக்கத் தொடர்

மட்டுமே ஈழத்தமிழர் பிரச்சினைக்காகக் குரல எழுப்புகிறது. அதனால் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கிறது. இது போதாது, கர்நாடக முதலமைச்சர் திரு ஹெக்டே அண்மையில் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ஆரைச் சந்தித்த போது தென்னிந்திய முதலமைச்சர்கள் மாநாடு கூட்டி இப்பிரச்சினையை மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டுமென்று தெரிவித்திருந்தார். இந்த யோசனையைக் காலம் தாழ்த்தாது செயற்படுத்துவதால ஈழப்பிரச்சினை தீர பல வாய்ப்புகள் ஏற்படும்" என்றும் அவர் விபரித்துச் சொன்னார்.

திரு பண்டாரியின் வருகைக்கும் பார்த்தசாரதியின் முன்னைய வருகைக்குமிடையே எந்த வித்தியாசமுமில்லை என்று சொன்ன அந்த அமைச்சர், "இலங்கையின் மனமாற்றத்தில்தான் சகலதும் தங்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.

### வாளி, கதிரை..

—1ஆம்பக்கத் தொடர்

போன்ற சில பொருட்கள் நேற்று முன்தினம் இரவு லொறி ஒன்றில் ஆயுதங்களுடன் வந்த சில இளைஞர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன. இதே நிலையத்திலிருந்து பெருந்தொகையான உணவுப் பொருட்கள் சில தினங்களுக்கு முன் கொள்ளையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### அனுரா, ஸ்ரீமா..

இனப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது குறித்து இலங்கையும் இந்தியாவும் இணங்கியுள்ளதாக இந்திய வெளியுறவு செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரியின் இலங்கை விஜயத்தின் பின்பு வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

## நல்லை ஆதீன சுவாமிகள் குருபூஜை

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர், குருமஹா சந்நிதானம். நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நல்லை ஆதீனத்திலுள்ள ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கு இன்று மாலை 5 மணிக்கு அனுஞ்ஞை வாஸ்து சாந்தியும், 6 மணிக்கு கடக ஸ்தாபன சங்க ஸ்தாபனமும் நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாகபூஜை. விசேஷ ஹோமம் ஆகியனவும், பதினொரு மணிக்கு சங்காபிஷேகமும், தொடர்ந்து விசேஷ பூஜை, பஞ்சமுகார்ச்சனை. குரு முறை அர்ச்சனை ஆகியவையும் நடைபெறும். நண்பகல் மகேஸ்வர பூஜை நடைபெறும்.

### வானத்திலிருந்து..

—1ம்- பக்கத் தொடர்

நோக்குக் கூட்டுறவுச் சங்க மேல் மாடியின் கூரையைப் பிளந்துகொண்டு குண்டு ஒன்று உள்ளே வந்து, கடமையிலீடுபட்டிருந்த காசாளர் கதிர்காமநாதனின் முதுகுப் பகுதியால் புகுந்து, நெஞ்சைத் துளைத்துக் கொண்டு வெளியே வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது இரத்தம்வெள்ளம்போல பாய்ந்த நிலையில் அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாராயினும் மரணமானதாக அறிவிக்கப்பட்டது.

சுமார் அரைமணி நேரமாக நடைபெற்ற துப்பாக்கி வேட்டைத் தொடர்ந்து, இப்பகுதிப் பாடசாலைகள், வர்த்தக நிலயங்கள் அனைத்தும் மூடப்பட்டன தெல்லிப்பளை, மல்லாகம் பகுதிகளில பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது,

### நாவற்குழி புதிய..

— 1ஆம்-பக்கத் தொடர்

பெரிதும் கஷ்டப்பட்டன இக்குடும்பங்களுக்குப் பண்ணையில் சற்சில இடங்களில் குடியமர்த்த எடுத்துக் கொண்ட முயற்சிகளும பயனளிக்கவில்லை.

இதைத் தொடர்ந்தே இக்குடும்பங்களை நாவற்குழி தேசிய வீடமைப்புத் திட்டத்தில புதிதாக அமைக்கபபட்டு, வேலைகள் பூர்த்தியடைந்த வீடுகளில் அதிகாரசபையின் உத்தரவுக்கிணங்க கடந்த மாதம் 28ம் திகதி 30 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இதைத் தொடர்ந்து இம்மாதம 25ம் திகதி மேலும் பதினைந்து குடும்பங்கள் குடியேற்றபபட்டுள்ளன.

மேலும் சுமார் 85 குடும்பங்கள் தேசிய வீடமைப்புத் திட்ட அதிகாரசபையின் உத்தரவுடன், விரைவில் நாவற்குழி தேசிய வீடமைப்புத திட்டத்தில் குடியேற்றப்படவுள்ளன.


ஹற்றன் நாஷனல் வங்கியின் கொள்ளையால் பாதிக்கப்பட்டோரின் தொடர் கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 30/3/85 சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம வை எம.சீ ஏ. (Jaffna YMCA) கட்டடத்தில் நடைபெறும். அனைவரையும தவறாது சமுகமளிக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

R J குணரத்தினம்
தலைவர்

50, பலாலி வீதி
கோண்டாவில்


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து கதிரேசு

இளைப்பாறிய வன பரிபாலன உத்தியோகத்தர் சரவணமுத்து கதிரேசு காலமானார். அன்னார் பூதீஸ்வரியின அருமைக் கணவரும், நந்தகோபன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) Dr. நந்ததேவி (அவுஸ்தரேலியா) நிமலினி (சட்டத்தரணி, சாவகச்சேரி) நந்தபாலன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) நந்தினி டொலி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தகப்பனும், சந்திரலேகா (அவுஸ்திரேலியா) Dr சந்திரரட்ணம் (அவுஸ்திரேலியா) சட்டத்தரணி அம்பிகைபாலன் J P U M (சாவகச்சேரி) ரோகிணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று (28-3-85) வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு 18/4, சீனியர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, கலட்டி அம்மன் வீதியிலிருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: நிமலினி அம்பிகைபாலன்
சட்டத்தரணி, சாவகச்சேரி.


மீண்டும் நடைபெறுகிறது

சேவ்ரி ரவல்ஸ் தாபனத்தாரின்

யாழ்ப்பாணம் - கொழும்பு

மாலை நேர சொகுசு பஸ்சேவை தினம் பிறபகல் 2 மணிக்கு பண்ணையிலிருந்து புறப்படுகிறது.

ஏனைய சேவைகளும் வழமை போல் நடைபெறுகின்றன.

சேவ்ரி ரவல்ஸ்
(SAFETY TRAVELS)
பண்ணை, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 22808


## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை சோதிப்பிள்ளை

நல்லூர் கொண்டலடியைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை சோதிப்பிள்ளை காலமாகிவிட்டார் இவர் காலம் சென்ற வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, மாணிக்கம் மற்றும் சரஸ்வதி, இரத்தினம், இராமேஸ்வரம், சண்முகநாதன் ஆகியோரின் தாயாரும் மார்க்கண்டு, செல்லையா, கந்தையா ஆகியோரின் மாமியாருமாவார் அன்னாரின் ஈமக்கிரியை இன்று 28 03 85 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

முகவரி : சாத்தாவத்தை, மானிப்பாய்

தகவல் : ந சிறீலிங்கம்

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 28-3 1985 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி; 23336